**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

# STC.NO- 264/2024

## Dated :27.02.2026

## Deposition of witness for : D.W.2

## Cross Examination of DW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகம்மது ஆரிப் | வயது | : | 60 |
| தந்தை பெயர் | : | அகமது நசீர் | தாலுகா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | ரியல் எஸ்டேட் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்.)

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1) எதிரி முகமது மைதீன் தந்தை பெயர் என்ன என்றால் அப்துல் மஜீது ஆகும். அவர் சுந்தம்பட்டியில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து, அவரது வீட்டிற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் இரண்டும் ஒரே வீடு தான். அப்துல் மஜீது எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது தாய் மாமா ஆவார். நான் தஞ்சாவூரில் எத்தனை வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் சுமார் 25 வருடங்களாக வசித்து வருகிறேன். வின்லேண்ட் புரோமோட்டர்ஸ் -இல் நான் பணிபுரிந்ததற்கான ஆவணம் அல்லது சம்பளம் பெற்றதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, சம்பளம் கையில் தான் கொடுப்பார்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 2ஆம் வகுப்பு படித்துள்ளேன். நிலம் சம்மந்தப்பட்ட அளவுகள் குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். வின்லேண்ட் புரோமோட்டர்ஸ்-க்கு இடம் வாங்கி விற்பனை செய்து கொடுத்தது சம்மந்தமான ஆவணம் ஏதும் அளித்துள்ளேனா என்றால் இல்லை, நான் இடைத்தரகராக வேலை செய்து வந்தேன்.

2) வின்லேண்ட் புரோமோட்டர்ஸ் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமா என்றால் ஆமாம், 2010 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. அந்த பதிவு ஆவணத்தில், நான் சாட்சிக்கையொப்பம் எதுவும் செய்தேனா என்றால் இல்லை. வின்லேண்ட் புரோமோட்டர்ஸ் நிறுவனத்தில் நான் வேலை செய்ததாக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரரை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 20 வருடங்களாக தெரியும். புகார் தாரர் எனக்கு எந்த வகையில் பழக்கம் என்றால் மைதீனுக்காக அவரிடம் இருந்து இடம் வாங்கிய வகையில் பழக்கம்.

அக்கச்சிப்பட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி நகரில் வாங்கிக்கொடுத்ததாக சொல்லும் இடத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது, மொத்தம் 69 செண்ட் விஸ்தீரணம் உள்ள இடம் வாங்கிக்கொடுக்கப்பட்டது. ஒரு செண்ட்டின் விலை ரூ.33,500/- என பேசி வாங்கிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான், நமச்சிவாயம், ராஜேந்திரன், ஆறுமுகம், யோகராஜ் மற்றும் ஜாபர் ஆகியோர் கிரைய ஒப்பந்தத்திலோ, கிரைய ஆவணத்திலோ சாட்சிக்கையொப்பம் எதுவும் செய்தோமா என்றால் ஜாபர் செய்திருப்பார், எனக்கு ஞாபகம் இல்லை, எதிரி முகமது மைதீன் கையொப்பம் செய்தார், நான் கையொப்பம் செய்யவில்லை, மற்றவர்கள் கையொப்பம் செய்தார்களா என்று தெரியவில்லை. நானும் மேற்படி நபர்களும் கிரையம் ஏற்பட்ட போது, அங்கிருந்ததாக சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல.

3) அந்த இடம் எத்தனை மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டது, யார் யாருக்கு விற்பனை செய்யப்பட்டது, நான் அந்த ஆவணங்களில் சாட்சிக்கையொப்பம் எதுவும் செய்துள்ளேனா என்றால் ரொம்ப வருடம் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. வின்லேண்ட் புரோமோட்டர்ஸ் நிறுவனத்தின் தஞ்சாவூர் முகவரி தெரியுமா என்றால் அழகம்மாள் நகர், புதிய பேருந்து நிலையம், தஞ்சாவூர் ஆகும். அந்த முகவரியே இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் தஞ்சாவூருக்கு வந்து, பிரச்சினை செய்தார் என பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிரி தாய் மாமா மகன் என்பதால், அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.27 16:02:00 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**